## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 5–ம் நாள் வியாழக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>வெங்கடாசலம்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**05.03.2026 OS. 11/2022 வா.சா.2 வெங்கடாசலம்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் லாடனேந்தலில் குடியிருந்து வருவதாக தெரிவித்துள்ளதில் மேற்படி இடமானது தாவா சொத்தை குறிப்பிட்டுள்ளேனா அல்லது வேறு இடமா என்றால் தாவா சொத்திற்கு அருகாமையில் உள்ள இடமாகும். என்னுடைய சொந்த ஊர் என்னவென்றால் கட்டிக்குளம் ஆகும். நான் யார் மூலமாக தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் பிரதிவாதியும் அவரது மகன்களும் திருப்புவனத்தில் நாங்கள் குடியிருந்த சமயத்தில் எங்கள் வீட்டிற்கு வந்து அவசர நிமித்தம் மகனை வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டி இருப்பதால் பணம் தேவை என சொல்லி பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுப்பதாக தெரிவித்தார்.

2) தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் நான் கிரையம் வாங்கியது 25 செண்ட் ஆகும் அதன் மொத்த விஸ்தீரனம் எனக்கு தெரியாது. என் மனைவி பெயரில் கிரையம் வாங்கியுள்ள இடத்தின் நான்குமால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் கிழக்கே, மேற்கே, வடக்கே சுகுணாவின் தோப்பு, தெற்கே வாய்க்கால் செல்கிறது. நான் எனது மனைவி பெயரில் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 2017 ம் வருடம் கிரையம் வாங்கியதாக நினைக்கிறேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

3) நாங்கள் கிரையம் வாங்கிய சொத்திற்கு செல்ல பாதை எவ்வாறு அமைந்திருந்தது என்றால் நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு தென்வடலாக ஒரு பாதை சென்று கிழமேல் ரோட்டில் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி கிழமேல் பாதையானது எங்களுக்கு கிரையம் கொடுத்த 1ம் பிரதிவாதி வீடு வரை நீண்டு இருந்தது. எங்களுக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த சொத்து யார் பெயரில் இருந்து வந்தது என்றால் 1ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் இருந்து வந்ததாக ஞாபகம். நாங்கள் கிரையம் வாங்கியபோது தாவா சொத்து என்ன அமைப்போடு இருந்தது என்றால் தாவா சொத்தில் தென்னந்தோப்பு இருந்தது.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.05 17:02:47 +0530

4) தற்போது தாவா சொத்து எவ்வாறு உள்ளது என்றால் தற்போது வரை தாவா சொத்து அப்படியே உள்ளது மேற்கே செட் அமைத்து நாங்கள் அதில் குடியிருந்தோம். தாவா சொத்தில் நான் போர்வெல் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். தாவா சொத்திற்கு செல்லும்பாதையின் நீளம், அகலம் தெரியுமா என்றால் 15 அடி அகலமும், 200 அடி நீளமும் உள்ள பாதையாகும். மேற்படி பாதையானது என்ன தன்மையில் இருந்தது என்றால் மண் சாலை ஆகும். பாதை குறித்து எங்கள் கிரையபத்திரத்தில் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தென்வடல் 15 அடி அகலமும் கிழமேல் 200 அடி நீளமும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

5) தாவா பாதையானது காமாட்சி அம்மன் கோவிலிருந்து செல்வது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காமாட்சி அம்மன் கோவிலிருந்து செல்லும் பாதை எத்தனை அடி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு இடத்தை அளக்க வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை. காமாட்சி அம்மன் கோவிலிருந்து நாங்கள் கிரையம் வாங்கிய சொத்திற்கு செல்லும் பாதை என்ன பாதை என்றால் ஹாலோ பிளாக் கல்லால் அமைக்கப்பட்டதாகும்.

6) எனக்கு எழுத, படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியைத் தான் நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துமே தோப்பாகத்தான் உள்ளது என்றால் சரிதான். தோப்பிற்குள் நாங்கள் நடந்து சென்று புழங்கி வருகிறோம் என்றாலும் தோப்பிற்கு இடையே தனியாக பாதை எதுவும் அமைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது . )**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.05 17:02:55 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam